**வீரகெட்டிய பிரதேச சபை**
**அம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூன் 18 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 யூன் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 23 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக வீரகெட்டிய பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

2010 சனவரி 19 ஆந் திகதிய PED/54 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின்படி 2011 சனவரி 01 ஆந் திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்களினால் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த நியமங்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையான சொத்துக்கள் கணக்கு வைத்தல் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

i. இயந்திர உபகரணம் மற்றும் 13 மோட்டார் வாகனங்களின் பெறுமதி நிலையான சொத்துப் பதிவேட்டின் படி ரூபா 35,122,110 ஆக இருந்ததுடன் ஐந்தொகையின் படி ரூபா 50,688,000 ஆகும். அதன்படி ரூபா 15,565,890 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

ii. நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட பெறுமதி குறிப்பிடப்படாத காணி மற்றும் 21 கட்டிடங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் ரூபா 280,000 பெறுமதியான 05 காணிகளின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

iii. நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்படாததும் பெறுமதி குறிப்பிடப்படாததுமான 22 மயான நிலங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iv	கொந்தகலயில் அமைந்துள்ள பிளிசறு செயற்திட்டத்திற்குரிய காணி மற்றும் கட்டிடங்களுக்காக ரூபா 6,413,963 தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 6,100,000 தொகை மாத்திரமே மூலதனமாக்கப்பட்டிருந்தது. அதன் படி ரூபா 313,963 தொகை குறைத்து மூலதனமாக்கப்பட்டிருந்தது.

v.	பிரதேச சபையின் புதிய அலுவலகக் கட்டிடத்தைச் சுற்றி எல்லை மதிலை நிர்மாணிப்பதற்காக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 326,532 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ)	ரூபா 1,450,288 கூட்டுத்தொகையான முற்பணம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் தீர்க்கப்பட்டிருந்தும் அவை முற்பணக் கணக்கில் செலவு வைக்கப்படாது தீர்க்கப்படாத முற்பணமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. இதில் உள்ளடக்கப்பட்ட அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக செலுத்தப்பட்ட ரூபா 1,000,000 தொகையான முற்பணம் 2013 ஆகஸ்ட் 28 ஆந் திகதி தீர்க்கப்பட்டிருந்ததுடன் 109 செலவின விடயங்களுக்குரிய செலவினம் வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ)	உள்ளுராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் தளபாடம் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 2013 ஆம் ஆண்டிற்குரிய 2014 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 1,364,893 தொகை மீளாய்வாண்டின் வருமானம் மற்றும் ஆண்டின் கடன்பட்டோர் ஆகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ)	பிளிசறு செயற்திட்டத்திற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களுக்குரிய மத்திய சுற்றாடல் அதிகாரசபையிலிருந்து ரூபா 213,520 தொகை கிடைக்க வேண்டிய போதிலும் அது ரூபா 305,195 ஆக ஐந்தொகையில் நானாவிதக் கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ)	4797677 ஆம் இலக்க சேமிப்புக் கணக்கில் ஐந்தொகையில் காசு இன் கீழ் ரூபா 666,181 ஆகவும் முதலீட்டின் கீழ் ரூபா 693,322 ஆகவும் இரண்டு இடங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கணக்கிற்காக மீளாய்வாண்டிற்குரிய வட்டி வருமானத்தைக் கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ)	நிலையான வைப்பு, செலவினக் கடன்கொடுத்தோர் மற்றும் பெறவேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் என்ற கணக்குகளுக்குரிய பிரதான பேரேட்டிற்கும் நிதிக்கூற்றுக்களுக்குமிடையே ரூபா 17,146,907 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(எ)	வங்கி நடைமுறைக் கணக்கிற்கிடையே மேற்கொள்ளப்பட்ட காசு மாற்றல்கள் சரியாகக் கணக்கீடு செய்யப்படாமையினால் சபையின் கணக்குகளுக்கிடையே காசு மாற்றல்களின் பெயரில் ரூபா 5,885,966 செலவு மீதியொன்று ஏற்பட்டிருந்ததுடன் அது ஐந்தொகையில் முற்பெறுவனவுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ)	முன்னைய ஆண்டில் முன்கொண்டுவரப்பட்ட தொங்கல் கணக்கில் ரூபா 1,229,593 செலவு மீதி ஏற்பட்ட முறையினைக் கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காது நாட்குறிப்புப் பதிவு இலக்கம் 40 இன் மூலம் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஐ)	2013 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 41,055,000 செலுத்த வேண்டிய மூலதனச் செலவினத்தை கணக்கீடு செய்வதற்காக நாட்குறிப்புப் பதிவு இலக்கம் 35 இன் மூலம் மூலதனச் செலவினம் (309 மற்றும் 209) இல் வரவு வைக்கப்பட்டு நானாவிதக் கடன்கொடுத்தோரில் செலவு வைக்கப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டிருந்தும் பேரேட்டில் கடன்கொடுத்தோரில் அத்தொகை வரவு வைக்கப்பட்டமையால் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 82,110,000 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஒ)	மீளாய்வாண்டின் கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஓ) வீதி விளக்கு பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு இலங்கை மின்சார சபையிலிருந்து மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய ரூபா 95,080 தொகை ஐந்தொகையில் வருமானக் கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) வருமானம் மானியம் (5-70) இன் கீழ் வீதி விளக்கு மீளளிப்பு வருமானமாக வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 285,240 தொகை செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் ஆண்டின் போது காசாகப் பெறப்பட்ட ரூபா 342,630 தொகையும் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(க) MG/9/11/189 மற்றும் MG/09/11/188 என்ற இரண்டு மகநெகும செயற்திட்டத்திற்காக 2013 சனவரி 01 மற்றும் 02 ஆந் திகதிகளில் நிதி கிடைத்திருந்தது. அந்த இரண்டு செயற்திட்டங்களுக்காகவும் ரூபா 948,421 கூட்டுத்தொகையானது கிடைக்க வேண்டியதாக ஐந்தொகையில் வருமானக் கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. அத்தொகை நிர்மாணங்களை நிறைவேற்றிய விவசாய அமைப்புக்களுக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஐந்தொகையில் கடன்கொடுத்தோரின் கீழும் காண்பிக்கப்பட்டிருந்தன.

(கா) 2013 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 1,800,000 கூட்டுத்தொகையான 02 மாகாண குறித்தொதுக்க வேலைகளுக்காக கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் நிதியேற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(கி) 2013 ஆம் ஆண்டில் சபை நிதியத்தின் மூலம் வீரகெட்டிய பிரதேச சபை முன்பள்ளிப் பாடசாலைக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,500,000 மதிப்பிடப்பட்ட தொகையில் 2013 ஆம் ஆண்டில் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக கடன்கொடுத்தோர் நிதியேற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(கீ) 2013 மே 29 ஆந் திகதி ரூபா 73,289 தொகை தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அது பேரேட்டில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக் கட்டுப்பாட்டுக் கணக்கின் கொடுப்பனவாக பதியப்படாதிருந்ததுடன் ஒப்பந்த வைப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(கு) நாட்குறிப்புப் பதிவு இலக்கம் 32 இன் படி உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் ஆரம்ப மீதியை சரி செய்வதற்காக ரூபா 44,041,586 தொகை உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் அது ரூபா 43,381,002 ஆக சரிசெய்யப்பட வேண்டியிருந்தது. அதன் படி ரூபா 660,584 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(கூ) நாட்குறிப்புப் பதிவு இலக்கம் 31 இன் படி வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 289,100 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் (2-30) ஆக செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 686,507 தொகை செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

7 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின்படியான பெறுமதிக்கும் உபயோகப் பதிவேடுகளின் படியான பெறுமதிக்கும் இடையே ரூபா 4,205,247 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

ரூபா 1,862,908 கூட்டுத்தொகையான 3 கணக்கு விடயங்களுக்காக தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,780,023 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 81,229,174 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| i. | வீதவரியும் வரியும் | 1,892 | 858 | 3,480 |
| ii. | வாடகை | 24,481 | 16,854 | 3,228 |
| iii. | ஏனைய வருமானம் | 26,973 | 24,968 | 57,825 |

**2.2.2 ஆதன வரி**

(i) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை ஆதனவரி வருமானம் ரூபா 3,480,390 தொகையினை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருகக்வில்லை.

(ii) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 3,480,390 தொகையான ஆதனவரி நிலுவையில் ரூபா 5,000 இற்கு மேற்பட்ட மீதி தொடர்பாக பரீட்சித்த போது 68 அலகுகளில் ரூபா 628,083 தொகை அறவிடவேண்டியிருந்தது.

(iii) 2002 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆதனவரி மதிப்பீட்டின் அடிப்படையில் 2013 ஆம் ஆண்டின் போதும் ஆதனவரி அறவிடப்பட்டிருந்ததுடன் புதிய மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கடை வாடகை**

(i) உள்ளுராட்சி ஆணையாளரின் 2011 சனவரி 01 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 05 ஆம் உப பிரின் படி சகல உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒரு தடவை நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான பஸ்மங் சந்தியில் 04 கடைகள் மற்றும் பொதுச் சந்தையின் 7 கடைகள்

தொடர்பாக உரிய உடன்படிக்கை 25 வருடங்களுக்கு மேற்பட்ட பழைமையானதாக இருந்ததுடன் அந்த உடன்படிக்கையை நாளதுவரையாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்கூறப்பட்ட சற்றறிக்கையின் 02, 03 மற்றும் 05 ஆம் பிரிவின் படி மதிப்பீட்டாளர் ஒருவரை வருவித்து பெறப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் கடை வாடகை நிர்ணயிக்கப்பட வேண்டியிருந்ததுடன் மதிப்பீட்டு வாடகை சபையின் அங்கீகாரத்துடன் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அந்த சுற்றறிக்கையின் 6 ஆம் பிரிவின் படி ஏதாவது ஒரு தரப்பால் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பிடப்பட்ட வாடகைப் பணம் புதிய மதிப்பீட்டின் மூலம் திருத்தப்பட வேண்டியிருந்தமையும் காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2013 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்ட கடை வாடகைக்காக முறையான மதிப்பீடொன்று பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) கடை வாடகைப் பணம் 2006 சனவரி 01 ஆந் திகதி முதல் அமுல்படும் வகையில் 2005 ஆம் ஆண்டின் போது அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த வாடகை தீர்மானிக்கப்பட்ட முறையும், அதன் புதிய வாடகை உள்ளடக்கப்பட்ட உடன்படிக்கையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் பொதுச் சந்தையின் 05 கடைகளின் பழைய உடன்படிக்கையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 இயந்திர உபகரணக் கட்டணம்

மீளாய்வாண்டின் இறுதியில் வெளித்தரப்பினருக்கும் சபையில் சேவையில் ஈடுபட்டிருக்கின்றவர்களிடமிருந்தும் அறவிடவேண்டிய ரூபா 1,008,296 தொகையான நிலுவை இயந்திர உபகரணக் கட்டணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 ஏக்கர் வரி

மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையில் நிலுவை ஏக்கர் வரி வருமானம் ரூபா 43,303 தொகையினை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் ரூபா 9,614,682 கூட்டுத்தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அறவிடவேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

(I) பிரதேச சபையினால் 2013 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்ட பெறுமதிசேர் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் முத்திரைக் கட்டணங்களின் ரூபா 6,256,245 கூட்டுத்தொகையை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(II) 2013 ஆம் ஆண்டின் பாதீட்டு முன்மொழிவின் படி 2013 சனவரி 01 முதல் தேசசத்தைக் கட்டியெழுப்பும் வரி அறவிடப்படாது என உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் அறிவித்திருந்த போதிலும் அதற்கு முரணாக கட்டணம் அறவிடப்படாமையினால் வீரகெட்டிய, மொறயாய மற்றும் ஜூலெம்பிட்டிய பொதுச் சந்தை

வாடகையாளர்களிடமிருந்து ரூபா 85,773 தொகை தவணைப்பணமாக மேலதிகமாக அறவிடப்பட்டிருந்தது.

(III) சபைக்கச் சொந்தமான 01 கெப் வண்டி, 05 உழவு இயந்திரங்கள், 02 ஜேசீபீ, 01 தண்ணீர் பவுசர் மற்றும் 01 மோட்டார் கிறேடர் என்பவற்றுக்காக பல வருடகாலமாக வருமான அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

வழங்கப்பட்டிருந்தும் காலாவதியான ரூபா 223,418 கூட்டுத்தொகையான 10 காசோலைகள் தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட பௌதீக வளங்கள்

ரூபா 87,189 தொகையான நீர் உபகரணங்கள் மற்றும் குழாய்க் கிணறு உபரகணங்களின் இருப்பு விளைவற்றுக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) பழுதுபார்த்தலுக்காக அனுப்பப்பட்ட நிழற்படப்பிரதி இயந்திரம்

சபைக்குச் சொந்தமான 7160 என்ற கெனன் நிழற்படப் பிரதி இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்காக 2007 திசெம்பர் 28 ஆந் திகதி மாத்தறை மெட்ரோ பொலிட்டன் நிறுவனத்திற்கு அனுப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2014 யூன் 26 ஆந் திகதி வரையிலும் அதனை பழுதுபார்த்து சபைக்கு எடுத்துவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 புதிய அலுவலகக் கட்டிடத்திற்கு காற்றுச் சீராக்கி இயந்திரம் கொள்வனவு**

புதிய அலுவலகக் கட்டிடத்திற்கு காற்றுச்சீராக்கி இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 980,200 தொகையான விலைப்பட்டியல் கிடைத்திருந்ததுடன் அதில் ரூபா 500,000 தொகை 2013 செப்தெம்பர் 13 ஆந் திகதி தனியார் நிறுவனமொன்றிற்குச் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

i. 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 208 இன் பிரகாரம் கொள்வனவுகளின் அளவு ரூபா 50,000 இனை விஞ்சுமாயின் அது தொடர்பான கேள்வி அறிவித்தல் செய்திப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாது அது தொடர்பான அறிவித்தல் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பிரதேச செயலகங்களிலும், வலஸ்முல்ல உப அலுவலகத்திலும் மற்றும் வீரக்கெட்டிய, வலஸ்முல்ல கமநல சேவை அலுவலகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

ii. 2006 இன் அரசாங்க கொள்வனவு செயற்கோவையின் 2.14.1 இன் படி ரூபா 250,000 இற்கு மேற்பட்ட கொள்வனவுகளுக்காக ஆகக் குறைந்தது 05 கூறுவிலைகள் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் 03 கூறுவிலைகள் மாத்திரமே கிடைத்திருந்தன.

iii. உரிய சேவை வழங்கும் நிறுவனங்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டில் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் கிடைக்கப் பெறாதிருந்தமையும் சில செலவின விடயங்களில் பாரியளவிலான சேமிப்புகள் காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது. அதன் படி பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) வருமான நிர்வாகம்